**சுருக்கம்**

வனம் – திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம் வட்டம் – 30, ஒட்டன்சத்திரம் கிராமம் – ஒட்டன்சத்திரம் வன வட்டாரம் – நில அளவை எண் 84/1B–ல் உள்ள 0.20.56 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை**

**அரசாணை (நிலை) எண்.24** | நாள்: 30.01.2023

சுபகிருது , தை–16

திருவள்ளுவர் ஆண்டு–2054

**படிக்க.:**

1. அரசாணை (நிலை) எண்.14, சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்.14) துறை, நாள்.15.02.2018.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–15. கடித எண்.டிஎஸ்2/26320/ 2019, நாள். 23.03.2022.

=======

**ஆணை :**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், 30, ஒட்டன்சத்திரம் கிராமம், ஒட்டன்சத்திரம் வன வட்டாரம், நில அளவை எண் 84/1B–ல் உள்ள 0.20.56 எக்டேர் எக்டர் நிலத்தினை தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைக்க கோரும் அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள்.15.02.2023–ல் ஆங்கிலத்திலும், திண்டுக்கல் மாவட்டம் அரசிதழ் நாள்.01.03.2023–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

..2.

2. 15.02.2023-ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அரசிடமிருந்து அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் வெளியிடுமாறு மதுரை அரசு கிளை அச்சக மேலாளருக்கு அறிவுறுத்துமாறு அரசு மைய அச்சக பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய, கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா ஸாஹு

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை - 1.(இணைப்புடன்).
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை.(இணைப்புடன்).
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
மற்றும் ஆணையர், நில நிர்வாகம், சென்னை - 5. (இணைப்புடன்).
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
(வனத்துறைத் தலைவர்),சென்னை - 32. (இணைப்புடன்).
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல். (இணைப்புடன்).
தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல். (இணைப்புடன்).
மாவட்ட வன அலுவலர், திண்டுக்கல்.(இணைப்புடன்).
வன நிர்ணய அலுவலர், திண்டுக்கல்.(இணைப்புடன்).

<u>நகல்</u> :–

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை–9. (இணைப்புடன்).
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD–IV) துறை,
சென்னை–9 (இணைப்புடன்).
சட்டத் (Opinion) துறை, சென்னை–9 (இணைப்புடன்).
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (மொழிபெயர்ப்பு)துறை,
சென்னை–9 (இணைப்புடன்).
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

**அரசாணை (நிலை) எண்.24,**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை,**

**நாள். 30.01.2023-ன் இணைப்பு**

| வரிசை எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை -9. | 2 | 2 |
| 2 | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை-32. | 3 | 3 |
| 3 | மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல். | 2 | 2 |
| 4 | தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல். | 5 | 5 |
| 5 | மாவட்ட வன அலுவலர், திண்டுக்கல். | 12 | 12 |
| 6 | வன நிர்ணய அலுவலர், திண்டுக்கல். | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹு**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

வி.எஸ்.சிவா
பிரிவு அலுவலர்

## பிற்சேர்க்கை.

## அறிவிக்கை.

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5 / 1882) 16–ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாற்புற எல்லைகளுக்குள் அடங்கிய நிலப் பகுதியை 31.07.2023–ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் காப்பு வனமாக இதனால் அறிவிக்கிறார்.

## விவர அட்டவணை.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | திண்டுக்கல் |
| 2. | வட்டத்தின் பெயர் | : | ஒட்டன்சத்திரம் |
| 3. | கிராமத்தின் எண் மற்றும் பெயர் | : | 30, ஒட்டன்சத்திரம் |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | ஒட்டன்சத்திரம் |
| 5. | நில அளவை எண் | : | 84/1B |
| 6. | பகுதியின் மொத்த பரப்பளவு | : | 0.20.56 எக்டேர் |

## நாற்புற எல்லைகள்.

வடக்கு.– இவ்வன வட்டாரத்தின் எல்லையானது, எண்.30, ஒட்டன்சத்திரம் கிராம நில அளவை எண்கள் 84/1A மற்றும் 84/1B ஆகியவை கூடும் சந்திப்பில் தொடங்கி, பொதுவாக நில அளவை எண் 84/1A–ன் தெற்கு எல்லை வழியாக கிழக்கு நோக்கிச் சென்று, எண்.30, ஒட்டன்சத்திரம் கிராம நில அளவை எண்கள் 84/1A, 84/1B மற்றும் வடக்கு சரிவு காப்பு வன எல்லையின் மேற்கு பக்க எல்லை கூடும் முச்சந்திப்பை அடைகிறது.

<u>கிழக்கு</u>.– அதன்பின்னர், இவ்வெல்லையானது பொதுவாக வடக்கு சரிவு காப்பு வனத்தின் மேற்கு எல்லை நெடுகிலும் தெற்கு நோக்கிச் சென்று, வடக்கு சரிவு காப்பு வனம் மற்றும் எண்.30, ஒட்டன்சத்திரம் கிராமம் நில அளவை எண் 84/1B ஆகியவை கூடும் சந்திப்பை அடைகிறது.

<u>தெற்கு</u>.– அதன்பின்னர், இவ்வெல்லையானது வடக்கு சரிவு காப்பு வனத்தின் வட எல்லை நெடுகிலும் மேற்காகச் சென்று, கிராம எண்.30, ஒட்டன்சத்திரம் கிராம நில அளவை எண்கள் 84/1A, 84/1B மற்றும் வடக்கு சரிவு காப்பு வனம் ஆகியவை கூடும் முச்சந்திப்பை அடைகிறது.

<u>மேற்கு</u>.– அதன்பின்னர், இவ்வெல்லையானது எண்.30, ஒட்டன்சத்திரம் கிராம நில அளவை எண் 84/1A ன் கிழக்கு பக்கம் நெடுகிலும் வடக்கு நோக்கிச் சென்று, தொடக்க எல்லையை அடைகிறது.

<u>அனுமதிக்கப்பட்ட உரிமைகள்</u>

இவ்வனவட்டாரத்தில் உரிமைகள் ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

சுப்ரியா ஸாஹூ
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்